ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2498/10 - 2026 ජූලි මස 21 වැනි අඟහරුවාදා - 2026.07.21

*2498/10 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திருமதி நிரஞ்சினி ஜெலஸ்ரனிஸ்லாஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமதி ஜஸ்மராஜ் மேரி யூட்ஸ் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் இராஜேந்திரா சசீலன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திருமதி ஜஸ்மராஜ் மேரி யூட்ஸ் என்பவர் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**இ. சசீலன்**
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்,**
**2026, யூலை 21.**

EOG 07- 0275

1A - PG 7829 - 05 (2026/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

நல்லூர் பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், நல்லூர் பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட செல்வி. இலகுநாதன் விநோதினி என்பவர் அங்கம் வகிக்கின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான நல்லூர் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமதி கோகிலா விவேகானந்தராசா என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

நல்லூர் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் இராஜேந்திரா சசீலன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திருமதி கோகிலா விவேகானந்தராசா என்பவர் நல்லூர் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**இ. சசீலன்**
**தெரிவத்தாட்சி அலுவலர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்,**
**2026, யூலை 21.**

EOG 07- 0276